



# புதிய இடத்திற்கு மாறும் வரையில் தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன்

# ஆலயம் உடைபடாது

## கோலாலம்பூர் டத்தோ பண்டார் உத்தரவாதம்

**பி.மலையாண்டி - எல்.கே.ராஜ்**

**கோலாலம்பூர், மார்ச் 21- தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவுக்கு அருகில் உள்ள தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தை உடைக்கும் நடவடிக்கையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம்(டிபிகேஎல்) ஈடுபடாது என்று கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ மைமூனா முகமட் ஷரிஃப் உத்தரவாதம் வழங்கினார். புதிய இடத்திற்கு மாறும் வரையில் அந்த ஆலயம் வழக்கம்போல இயங்க அனுமதிக்கப்படும் என்றும் இடமாற்றத்திற்கு முன்னர் அது இடித்துத் தகர்க்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.**

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

**புதிய இடத்திற்கு மாறும் ....**

கூட்டரசு சட்டவிதிகளுக்குட்பட்ட வகையில் சமய சுதந்திரத்திற்கு எந்தவிதப் பாதகமும் இன்றி இதன் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளும் முறையாக செயற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இந்த அலயத்தை உடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்று டிபிகேஎல் உத்தரவாதம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆலய விவகாரம் தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் கலந்து கொண்ட மைமுனா இவ்வாறு தெரிவித்தார்.

மஸ்ஜிட் இந்தியாவில், தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான நிலப்பகுதியில் பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட பரிந்துரைக்கப்பட்ட விவரம் தொடர்பிலும் அவர் விளக்கமளித்தார். அந்த நிலத்தின் உரிமையாளரான தனியார் நிறுவனமே இந்தப் பள்ளி வாசலை நிர்மாணிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

பள்ளிவாசலை நிர்மாணிக்க திட்டமிட்டது தனியார் நிறுவனமேயன்றி அரசாங்கம் அல்லவென்றும் அவர் தெளிவுப்படுத்தினார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி என்ற வகையில் இந்த விவகாரம் தொடர்பிலான அனைத்து ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளுக்கும் கைகொடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து யாவருக்கும் சாதகமான சிறந்த முடிவைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தாம் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

எந்த வகையிலும் எந்த ஓர் இனமும் ஒடுக்கப்பட்டுவிடக் கூடாது என்ற நடவடிக்கைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும் என்றார் அவர்.

சம்பந்தப்பட்ட ஆலயத்தை புதிய இடத்தில் நிர்மாணிப்பதற்கான இடத்தை டிபிகேஎல் அடையாளங்கண்டிருக்கிறது. இந்துக்கள் தங்கள் சமய வழிபாட்டை முறையாகவும் நிம்மதியுடனும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு உத்தரவாதமளிக்கும் நடவடிக்கையாகும் இது என்று அவர் விவரித்தார்.